பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 10உ (26—8—67) சனி ★ வெளியூர்: ஆவணி 11 (27—8—67) ஞாயிறு [இதழ்: 62

பம்பாய் முதலமைச்சர் கண் விழிக்கிருர்!

சிவசேனை பற்றிப் பேச முனைவு

பம்பாய், ஆக. 25—

சிவசேனையால் பம்பாயில் வாழும் தென்னிந்தியர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்து, இன்னும் நாலைந்து நாட்களில் பம்பாயில் வாழும் முக்கிய தென்னிந்தியர்களுடன், மராட்டிர முதலமைச்சர் வி. பி. நாயக் பேச்சு நடத்துவாரென்று தெரிகிறது.

சிவசேனையின் திட்டமிட்ட ஏற்பாடு

உண்மைக்கு திரைபோட பம்பாய் போலீசின் முயற்சி

வெறிக் கும்பலிடமிருந்து தப்பித்தவிதம்---கிருஷ்ணமூர்த்தி, உமாநாத் அறிக்கை

பம்பாய், ஆக. 25—

பம்பாயில், தென்னுட்டவருக்கு எதிராக வன்செயல்களில் ஈடுபட்டுவரும் சிவசேனை இயக்க நடவடிக்கைகளைக் குறித்து ஆராய்ந்தறிவதற்காகத் தமிழகத்திலிருந்து இங்கு வந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெ. கிருஷ்ணமூர்த்தி (தி.மு.க.), உமாநாத் (இடது கம்யூ.) ஆகியோர் சிவசேனை வெறியர்களிடையே சிக்கி, உயிர் தப்பினர்.

மத்திய பம்பாய் லால்பாக் பகுதியில் முந்நூறுக்கு மேற்பட்ட சிவசேனை ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டு, காரிலிருந்துவெளியே இழுத்தனர்! சற்றுத் தாமதித்திருந்தால் அவர்கள், குண்டர்களின் வெறித்தாக்குதலுக்கு இலாக்காகியிருக்கக்கூடும்!

போலீசு நிலையத்தில் புகார் கொடுக்க அவர்கள் சென்றபோது, காரைப்பின்னுலிருந்து அந்தக் கூட்டம் தாக்கியிருக்கிறது!

தோழர்கள் கிருஷ்ணமூர்த்தியும் உமாநாத்தும் சேர்ந்து விடுத்துள்ள ஒரு கூட்டறிக்கையில். தங்களுக்கு நேரவிருந்த ஆபத்துக் குறித்து அவர்கள் விளக்கியுள்ளனர்.

அந்த அறிக்கையில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது:—

"நாங்கள், சிவசேனையின் வெறித் தாக்குதலுக்குத் தப்பி அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்ட நேரத்தில், அந்த வெறிக் கூட்டம், லால்பாக் இடது கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளரான எஸ். எம். தால்வியைத் தாக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தோம். பின்னும் சில நிமிடங்களுக்கெல்லாம் இரத்தம் சொட்டச் சொட்ட அவர் போலீசு நிலையத்திற்கு வந்து சேர்ந்தார்.

லால்பாக்கில் உள்ள மலையாள சமாஜ அலுவலகத்திற்கு நாங்கள் சென்று, அண்மையில் மலையாள சமாஜ அலுவலகம் தாக்கப்பட்டது குறித்துக் கேட்டறிந்துகொண்டு வெளியே வந்த நேரத்தில் தான், இந்த வெறிச் செயல்கள் நிகழ்ந்தன.

நாங்கள் சமாஜத்தினுள்ளிருந்து வெளியே வந்தபோது, பெரும்பாலும் இளைஞர்களாக உள்ள அந்தச் சிவசேனைக் கூட்டத்தினர், 'சிவசேனை ஜிந்தாபாத்' என்று கூச்சல் போட்டுக் கொண்டே எங்களை நெருங்கி வந்து சூழ்ந்துகொண்டு, கீழ்த்தரமாக வசைமாரி பொழிந்ததுடன், மேலும் செல்ல வழிவிடாமல் மறைத்தும் கொண்டனர்!

நாங்கள் அவர்களை நட்பு முறையில் அணுகியபோது, அவர்கள், 'கம்யூனிஸ்டு ஒழிக; தி. மு. க. ஒழிக; உமாநாத் ஒழிக; கிருஷ்ணமூர்த்தி ஒழிக' என்று மேலும் உரக்கக் கூச்சலிடத் துவங்கினர்."

இந்த நிகழ்ச்சி குறித்துப் போலீசுத் தரப்பில் கூறப்படுவதாவது:

"தோழர்கள் கிருஷ்ணமூர்த்தியும், உமாநாத்தும், மலையாள சமாஜத்திற்குச் சென்று வெளியே வந்து காரில் ஏற முனைந்தபோது, 25—30 இளைஞர்கள், தி. மு. க.—கம்யூனிஸ்டு எதிர்ப்பு முழக்கங்களையும், சிவசேனை ஆதரவு முழக்கங்களையும் முழங்கினர்.

இரண்டு பேரும், கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் சவானுடன் காரில் ஏறி அந்த இடத்தைவிட்டு அகன்றனர்.

"லால்பாக் அருகில் அவர்கள் சென்றபோது, அந்தப் பகுதி கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் தால்வியைக் கண்டு, அவரிடம் நிகழ்ந்ததைக் கூறினர், அந்த இடத்தில் சில சிறுவர்கள் கூடிநின்று முழக்கமிட்டனர். தால்வி அந்தச் சிறுவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்! அதைத் தொடர்ந்து தால்வி தாக்கப்பட்டு, தமது நெற்றியில் சிறு காயமுற்ருர்; உடன் மருத்துவமனையில் அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. இது பற்றி திரு. தால்வி காலா சௌக்கி போலீசு நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்."

தமிழ் நாடு காங்கிரசுக்கு ஒரு கேள்வி

பம்பாயில் தென் இந்தியர்கள்—குறிப்பாகத் தமிழர்கள், 'சிவசேனை' என்னும் இனவெறி இயக்கத்தின் வன்முறைத் தாக்குதல்களுக்கு ஆளாகி உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பின்றி தவிக்கின்றனர்!

மத்திய உள்துறை அமைச்சர் சவாண், சிவ சேனை இயக்கம் பற்றி அதிகாரபூர்வமாகக் கண்டித்துப் பேசியுள்ளார்.

ஆறு மணி நேரம் கூட்டம் நடத்தி விடியற்காலை 4-மணிக்குத் தீர்மானம் போட்டிருக்கும் மகாராட்டிரக் காங்கிரசுக் கமிட்டி, அங்குள்ள தமிழர்களுக்கு வருத்தம் தெரிவித்து இனி பாதுகாப்பு அளிப்பதில் ஒத்துழைப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், தனது பாராளுமன்ற உறுப்பினரை அங்கு நேரில் அனுப்பி, நிலைமைகளை அறிந்துவரச் சொல்லியிருக்கிறது!

இதேபோல், கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் ஒருவர் அங்கு சென்றுள்ளார்.

கழக அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி ஆகியோர் பம்பாய்க்குச் சென்றிருந்தபோது, இது பற்றிப் பேசி வந்திருக்கின்றனர்!

முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழக அரசு மூலமாகப் புதுடில்லிக்கு, நிலைமைகளை உணர்த்தியிருக்கிருர்!

ஆனல்........!

தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டி மட்டும் இதுபற்றி இன்னும் வாய் திறக்கவே இல்லை!

ஏன்?

கவனம்! கவனம்!! கவனம்!!!

★ காங்கிரசுத் தலைவர் காமராசர், இன்று காலை (சனிக்கிழமை) 9-45 மணிக்குப் புதுடில்லிக்குப் புறப்பட்டுப் போயிருக்கிருர்!

★ நாளை (ஞாயிறு) மாலை 6 மணிக்கு தேனம்பேட்டை காங்கிரசு மைதானத்தில் 'வெண்புறுச் சேனை' துவக்கப்படுகிறது!

★ காமராசர் தமிழகம் வரும்போதும் போகும்போதும் நடத்தப்படும் பின்விளைவுகளைக் கூர்ந்து கவனிப்பவர்கள், இதையும் சிந்தையில் கொண்டு சிரத்தையுடன் கவனித்து வரவேண்டும்.

'மிலிடரி' வந்தது!

கன்னியாகுமரிக்கு அல்ல --- காஷ்மீரத்துக்கு!

"தமிழ் நாட்டில் காங்கிரசுக்காரர்கள் நினைத்தால் மிலிட்டரி வரும்" என்று கடற்கரையில் கொட்டி முழக்கிய காங்கிரசுத் தலைவர்கள், காஷ்மீரில் மிலிட்டரியை வைத்து அரசியல் நடத்தும் பரிதாபத்துக்குள்ளாகிவிட்டனர்!

கன்னியாகுமரிக்குக் கழக ஆட்சியில் மிலிட்டரியைக் கோண்டுவர முயற்சி செய்த காமராசர் டேல்லிக்குப் போவதற்கு முன்பே காங்கிரசு ஆட்சி நடத்தும் காஷ்மீரத்துக்கு மிலிட்டரி அனுப்பப்பட்டுவிட்டது!

மாநில அரசுக்கு அதிக அதிகாரம்

நடைமுறைக்கு ஏலாத யோசனையாம்!

சென்னை, ஆக. 24—

"நாட்டின் பாதுகாப்புக் கொள்கையையும் வெளிநாட்டுக் கொள்கையையும் மத்திய அரசு தன்னிடம் வைத்துக் கொண்டு மற்றவற்றை மாநில அரசுகளிடமே விட்டுவிட வேண்டுமென நினைப்பது நடைமுறைக்கு இயலாத கருத்தாகும்"

என்று தலைமை அமைச்சர் இந்திரா காந்தி, இங்கு செய்தியாளர்களிடம் கூறினர்.

பிரெஞ்சு பாலிஷ் சாவு

எண்ணிக்கை உயருகிறது

பம்பாய், ஆக. 25—

வட பம்பாயில், பிரெஞ்சுப் பாலிஷ் குடித்ததால் இதுவரை 14 பேர் இறந்திருக்கின்றனர். மூவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பேசாமலிருந்த காமராசர் பேசினர்! இனி, பேசுவதை அவர் நிறுத்தப்போவதில்லையாம்:

நிறையப் பேசட்டும்—அரசியலில் ஹாஸ்யம் கலக்காவிட்டால் சிறப்பென்ன இருக்கிறது?

எத்தனையோ காங்கிரசுத் தலைவர்கள், எப்படிப்பட்ட நேரங்களிலெல்லாமோ பதவி வகித்துச் சென்றிருக்கிருர்கள்; ஆனல், எந்தத் தலைவர் இப்படிப்பட்ட ஒரு நிலையில்கூட, இத்தனை ஹாஸ்யமாகப் பேசியிருக்கிருர்?

'சிவசேனைக்கு எதிராகத் தென்னக மாநிலங்கள் திரண்டெழுகின்றன!

மத்திய--மகாராட்டிர அரசுகளுக்கு தென்னக முதலமைச்சர்கள் கண்டனம்

தமிழகக் காங்கிரசு தலைமறைவா?

"தென்னக மக்கள்மீது மகாராட்டிரத்தில் வன்முறையை ஏவிவரும் சிவ சேனை இனவெறி இயக்கத்தின் போக்குகளைத் தடுத்து நிறுத்தக் கோரி கடுமையான கண்டனக் குறிப்பு ஒன்றை, கேரள—கன்னட—தமிழக அரசுகள், முறையே மகாராட்டிர—மத்திய அரசுகளுக்கு அனுப்ப முடிவு செய்திருக்கின்றன" என்று, பம்பாய் 'பிளிட்ஸ்' ஏடு செய்தி தெரிவித்துள்ளது.

கம்யூனிஸ்டுக் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஏற்கனவே பிரதிநிதிகளை பம்பாய்க்கு அனுப்பியிருப்பதனைச் சுட்டிக் காட்டியுள்ள 'பிளிட்ஸ்' ஏடு, மைசூர் முதலமைச்சரும், பம்பாய் முதலமைச்சருக்கு இது பற்றிக் கவன ஈர்ப்புக் குறிப்பு ஒன்றை அனுப்பியிருப்பதாக எழுதியுள்ளது.

"இந்திய ஒற்றுமைக்கும் தென்னகத்தினரின் உயிருக்கும் உடைமைக்கும் ஊறு விளைவிக்கும் 'சிவ சேனை'யின் வன்முறைகளுக்கு எதிராகத் திராவிட மாநிலங்களின் ஒன்றுபட்ட முயற்சி தேவை"

என்று தமிழக முதலமைச்சர், மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பாவுக்கு உணர்த்தியிருப்பதாக 'பிளிட்ஜ்' ஏடு மேலும் குறிப்பிட்டிருக்கிறது.

'சிவசேனை'யின் பிடியில் சிக்கி அவதியுறும் தென்னக மக்களின் இன்னல்கள் குறித்துத் தமிழகக் காங்கிரசு என்ன நடவடிக்கை எடுத்துவருகிறது என்பது பற்றி அந்த இதழ், ஏதும் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 10 (26—8—67) சனி

காந்தியாருக்குச் செய்த துரோகம்!

மைசூர் சட்டமன்றம் அண்மையில் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிடக்கூடிய கலால் சட்டம் ஒன்றை இயற்றியது. அப்புதிய சட்டத்தைச் செயல்படுத்த, மைசூர் காங்கிரசு அரசாங்கம் முனைந்துவிட்டது.

இயற்றப்பட்ட புதிய கலால் சட்டத்தின்கீழ்—அடுத்த திங்கள் முதல் நாள் முதற்கொண்டு—மைசூரில் கள்ளுக்கடைகளும், சாராயக் கடைகளும் திறக்கப்படவிருக்கின்றன. மைசூரைச் சேர்ந்த பீடார் மாவட்டத்திலும், வேறு ஆறு தாலுகாக்களிலும், இப்பொழுது இருப்பதுபோன்றே மதுவிலக்கு நீடித்து இருந்துவரும்.

மதுவிலக்கை ரத்து செய்வதைக் குறித்து காங்கிரசு அமைச்சரவைக்குள் ஒருமித்த கருத்து இல்லை. 'மதுக் கடைகளைத் திறக்க வேண்டும்' என்ற பேச்சு அமைச்சரவையில் தலைதூக்கிய பொழுதே, அதை எதிர்க்கும் முறையில், தமது அமைச்சர் பதவியை பெண் அமைச்சர் ஒருவர் உதறி எறிந்துவிட்டிருக்கின்றார்.

மதுக்கடைத் திறப்பை ஆதரித்துச் சட்டம் இயற்றப்பட்டு, அச்சட்டத்தின்படி மதுக்கடைகளைத் திறக்க அரசாங்கம் முன்வந்திருக்கின்ற இத்தருணத்திலும், மதுவிலக்கை எதிர்க்கக்கூடிய அமைச்சர்கள், மைசூர் காங்கிரசு அமைச்சரவையில் இருக்கத்தான் செய்கின்றனர். 'மதுவிலக்குத் தோல்விகண்டு விட்டது' என்ற—முதலமைச்சர் உட்பட மற்ற அமைச்சர்களின் வாதத்தை—மதுவிலக்குக்கு எதிராக உள்ள அமைச்சர்கள் ஒப்புக்கொள்ளவும் மறுக்கின்றனர்.

காங்கிரசு அமைச்சர்களின் மதுவிலக்கு ரத்துக் கொள்கையை முழுமுச்சாக எதிர்த்து வருகின்ற அமைச்சர்களான ஜட்டியும், இராசையாவும் கருத்தளவில் எதிர்க்கின்ற அளவுடன் இருந்துவிடவில்லை; மதுவிலக்கினால், தங்களைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்கள் பயனடைந்திருக்கின்றனர் எனக் கூறி, தங்கள் தொகுதிகளுக்கு மதுவிலக்கை நீடித்திருக்கச் செய்வதிலும் மற்ற அமைச்சர்களை இணங்கவைத்திருப்பதுடன், வெற்றியும் கண்டிருக்கின்றனர்.

'மதுவிலக்கு வெற்றி பெற்றிருக்கிறது—மதுவிலக்கினால் மக்கள் நன்மை அடைந்திருக்கின்றனர்' என்ற—மேலே குறிப்பிட்டிருக்கக்கூடிய இரண்டு அமைச்சர்களின் வாதத்தையும் ஒப்புக்கொண்டிருப்பதுடன், அவர்கள் கோரியதற்கிணங்கி அந்த இரண்டு அமைச்சர்களின் தொகுதிகளில் மட்டும் மதுவிலக்கு நீடித்து இருந்துவர ஒப்புதலும் தந்துள்ள முதலமைச்சர் உட்பட மற்ற அமைச்சர்களின் போக்கு வியப்பளிப்பதாக இருக்கிறது.

மதுவிலக்கினால் தங்கள் தொகுதியைச் சோந்த மக்கள் நன்மை அடைந்திருக்கின்றனர் என்ற மேற்படி அமைச்சர்களின் வாதத்தை, 'உண்மையானது' என ஒப்புக்கொண்ட முதலமைச்சரும், மற்ற அமைச்சர்களும், அந்த இரண்டு அமைச்சர்களும் கொண்டிருக்கின்ற முடிவிற்கு முழுவதும் முரணான முடிவிற்கு எப்படி வர முடிந்ததோ?

மதுவிலக்கு ரத்துக் கொள்கை, நிஜலிங்கப்பா அமைச்சரவையின் ஒருமித்த ஒன்றாக இருந்திட்டாலும் இல்லாமற்போனாலும், மைசூரில் செயல்படுத்தப்பட்டுவந்த மதுவிலக்கு, காங்கிரசு அரசாங்கத்தால் ஆழக் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது.

மதுவிலக்குத் திட்டம் 1937-ம் ஆண்டில் முதன்முதலாக மைசூர் அரசரால்—அன்றைய மைசூரில்—பரீட்சார்த்தமாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அது, 1948-ம் ஆண்டில்—பொறுப்பாட்சி ஏற்பட்டதற்குப் பின்னர்—மைசூரைச் சுற்றியுள்ள மாநிலங்களின் எல்லையோரப் பகுதியிலும், கோலார் தங்கவயல் பகுதியிலும், அப்பொழுது முதலமைச்சராக இருந்த கே. சி. ரெட்டி அவர்களால், தத்துவ அடிப்படையில் அமுல் செய்யப்பட்டது. பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக விரிவாக்கப்பட்டு, 1961-ம் ஆண்டில் மைசூர் நகரத்திலும், தாலுகாவிலும் செயலாற்றப்பட்டது.

அதற்குப் பிறகு, மற்றப் பகுதிகளிலும் மதுவிலக்கைச் செயல்படுத்துவது நிறுத்திவைக்கப்பட்டுவிட்டது. இதன் விளைவாக, பெங்களூரிலும், ரெய்ச்சூர், குல்பர்கா ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் மதுவிலக்கு இடம் பெறவில்லை.

மதுவிலக்கை மைசூர் காங்கிரசு அரசாங்கம் ரத்துச் செய்திருப்பதனால் ஏற்படக்கூடிய வியப்பைவிடப் பெரும் வியப்பினைத் தரக்கூடியது வேறொன்று இருக்கிறது. கலப்படம் செய்யப்படாத கள்ளும், சாராயமும் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வகையிலும், அவ்விரண்டும் குறைந்த விலையில் கிடைத்திடக்கூடிய வகையிலும் அரசாங்கம் மேற்கொள்ள இருக்கின்ற நடவடிக்கைதான் அது!

'மதுவிலக்குத் தோல்வி கண்டுவிட்டது; மதுவிலக்கினால் எதிர்பார்த்த நன்மையை மக்கள் பெறவில்லை என்ற காரணங்களைக் காட்டி மதுவிலக்கை ரத்து செய்துவிட வேண்டும்' என்ற தமது விருப்பத்தை, இன்றைய மைசூர் காங்கிரசு அரசாங்கம் நிறைவேற்றிக்கொண்டுவிட்டது. இவ்விரண்டையும், வேறு சிலவற்றையும் காரணங்களாகக் காட்டி, தங்களுடைய குற்றமுள்ள நெஞ்சுக்கு, மைசூர் காங்கிரசு அமைச்சர்கள் சாந்தி தேடிக்கொள்ள முனைந்துவிட்டனர்.

காங்கிரசு நிர்மாணப் பணிகளில், மதுவிலக்குக் கொள்கைக்கு முதலிடம் கொடுத்திருந்தார்—உலக உத்தமர் காந்தியார். அந்தக் கொள்கையை, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களே ஆழக் குழிதோண்டிப் புதைக்க முனைந்திட்டதன் மூலம், மறைந்த காந்தியாருக்கு மன்னிக்க முடியாத துரோகத்தைச் செய்தவர்களாகின்றனர்!

'குடிப் பழக்கத்திலிருந்து மக்களை மீட்சியுறச் செய்யவேண்டும்' என்பதற்காகக் காந்தியாரும், அன்றையக் காங்கிரசாரும் எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கைகள், எண்ணிலடங்கக் கூடியவை அல்ல. அன்றையக் காங்சிரசுக் கட்சிக்கு வலிவு தேடித் தந்த கள்ளுக்கடை மறியலும், அம்மறியலில் ஈடுபட்ட தொண்டர்கள் ஏற்ற துன்பங்களும், வரலாற்று நிகழ்ச்சிகளாகும்.

இவ்வளவையும், இன்றையக் காங்கிரசுக்காரர்கள் மறந்துவிட்டனர்—கைகழுவிவிட்டனர்! எஞ்சியிருந்த காந்தியாரின் இலட்சியத்திற்கும் இறுதியாக மரணச் சாசனம் எழுதிவிட்டனர்—காங்கிரசார்!

மதுவிலக்குப் பற்றி மறைந்த உத்தமர் காந்தியார் போதித்து வந்தது என்ன? அதை மறந்துவிட்ட காங்கிரசாருக்கு, இதன்கீழ், அப்போதனையைத் தருகிறோம் :—

"குடி என்பது, வளர்ந்துகொண்டே வரும் சமூகத் தீமை! வாய்ப்புக் கிடைக்கும்போது அதை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்பதே என்னுடைய கருத்தாகும்.

"இதன் நோக்கம் என்ன என்பது தெளிவானது. தொழிலாளர்களையும், அரிசனங்களையும் இந்தச் சாபக்கேட்டிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். இது, மகத்தான ஒரு பிரச்சினையாகும்.

"குடிப் பழக்கம் போவதற்கு எல்லாச் சமூக நல ஊழியர்களும் -- முக்கியமாகப் பெண்களும் -- தம்முடைய முழுச் சக்திகளையும் இயன்ற வரையில் உபயோகிக்கவேண்டி இருக்கும்.

"நான் குறிப்பிட்டுள்ள மதுவிலக்கு (இது இன்றியமையாதது என்பதில் சந்தேகமில்லை) இந்தச் சீர்திருத்தத்தின் ஆரம்பம்தான்.

"ஆசைகாட்டி அழைப்பதற்கு வீட்டுக்கு அருகிலேயே கள்ளுக்கடை இருக்கும் வரையில், குடிகாரரை நாம் அணுக முடியாது. ஒரு திறந்த பெட்டியில் இனிப்புப் பலகாரங்களை எதிரில் வைத்துவிட்டு, உடல்நலம் சரியில்லாத ஒரு குழந்தையையோ, அல்லது வயதான வரையோகூட, 'அதைத் தொடக்கூடாது' எனத் தடுக்க முடியுமா? அந்தப் பெட்டியையே அகற்றினாலன்றி அது சாத்தியமல்ல"

14–8–37-ல், 'அரிசன்' இதழில் உலக உத்தமர் காந்தியார், இவ்வாறு எடுத்துரைத்திருக்கின்றார்.

—கா. க.

சின்ன விஷயம்

காங்கிரசுப் பாம்புகள்!

எல்லாரும் ஒரு மாதிரி என்றால், காங்கிரசுத் தலைவர் காமராசர் ஒரு தனி மாதிரி!

காங்கிரசில் இருக்கிற எல்லாரும், 'கடந்த 20 ஆண்டுகளில், உலகத்தில் யாரும் செய்யாத சாதனைகளைக் காங்கிரசு செய்தது' என்று பேசுகிறார்கள்! குறிப்பாகத் தமிழகத்து மேடைகளில் 'முழங்கும்' கூலிப் பேச்சாளர்கள், 'அப்படிப் புனைந்துரைப்பதே தங்கள் கடமை' என்றுகூட நினைக்கிறார்கள்!

ஆனால் காமராசர் அப்படி அல்ல! 'எட்டினால் குடுமியைப் பிடி—எட்டாவிட்டால் காலைப் பிடி' என்பது அவர் பாணி!

எடுத்துக்காட்டாக, சென்னையில் இந்து இதழ்த் துணையாசிரியர் பிரிவுபசார விழாவில், செய்தியாளரிடையே அவர் பேசியதைச் சொல்லலாம் :—

"காங்கிரசு தப்புச் செய்தது உண்மைதான்; தலைவர்கள் தப்புச் செய்தார்கள்; 'அவர்களே திருந்தட்டும்' என்று நினைத்துச் சும்மா இருக்கக்கூடாது.

"பாம்பு கடித்த விஷத்தை பாம்பே வந்து இறக்கட்டும் என்று இருக்க முடியுமா?"

தன்னை உணர்ந்தும் தரணி ஆள முடியாத பெரியவர், எவ்வளவு அப்பட்டமாக உண்மை பேசி இருக்கிறார் பார்த்தீர்களா?

காங்கிரசுத் தலைவர்கள் பாம்புகளாம்! கடந்த இருபதாண்டுகளாக அவர்கள் பரப்பி வந்த கொள்கைகள் விஷமாம்!

இவ்வளவு பயங்கரமாகக் கழகத்துக்காரர் பேச முடியுமா? பேசினால் சும்மா விடுவார்களா காங்கிரசுக்காரர்கள்? நீதிமன்றத்தில் தண்டனை பெற்ற ஆத்திரத்திலேயே வீதிகளைப் போர்க்களம் ஆக்குகிறவர்கள் ஆயிற்றே அவர்கள்!

அது கிடக்கட்டும்—காமராசர் பேச்சைப் பார்த்தீர்களா?

காங்கிரசுத் தலைவர்கள் பாம்புகள்! அதன் கொள்கைகள் விஷம்! ஆனால், அவர்கள் சொற்படி நாடு நடந்திட வேண்டுமாம்—'பாம்பு பகை -- தோல் உறவு' என்கிற கதையில்!

பாம்பு செத்தால்தான், தோலுக்கு உறவு கொண்டாடலாம்!

"இப்போதுள்ள நிலையில் தேசிய உணர்ச்சியை எல்லார் உள்ளத்திலும் வளர்ப்பதுதான் நம்முடைய வேலை!"

இதுவும் அதே இடத்தில் அவர் பேசியதுதான்! அவரது விடுதலை நாள் பேச்சைப் பார்த்தாலே தெரியுமே—திரு. காமராசர், 'அதை' எவ்வளவு 'அழகாக' வளர்த்து வருகிறார் என்று!

'இராணுவத்தை அழைத்து வருகிறேன்' என்றாரே—போதாது?

'குயவனுக்கு ஆறு மாதம்—தடிகாரனுக்கு அரை நாழி' என்பார்கள்; அதுபோல், கால காலமாய் தியாகங்கள் பல செய்து உருவாக்கிய நல்லுணர்வை, சில விநாடிகளில் தகர்த்துத் தூள் தூளாக்குகிறார், காமராசர். தலை இருக்க வால் ஆடுமா?

வால்கள், விடுதலை நாளில் ஆடின! காரணம், தலையின் சூசகமாகத் தூண்டிவிடும் பேச்சுகள்!

'நாங்கள் விஷப் பாம்புகள்' என்று ஒப்புக்கொண்டாரே—அதற்காக அவரைப் பாராட்டியே ஆக வேண்டும்!

ஆனால், தேசிய உணர்ச்சியை இவர்கள் பரப்பிடப் போவதாகச் சொல்கிறாரே—அதிலேதான் தகராறு!

கொழு போன கலப்பை, இருந்து உழுமா என்ன?

நாய் குலைத்தும் விடியாது—கோழி கூவியும் விடியாது! விடிவுக்கு உதய சூரியன்தான்!

கழகம் பரப்பினால்தான் தேசிய உணர்ச்சியும் முறையாய் பரவும்—முழுமையாய்ப் பரவும்!

—பூரணன்

வேடிக்கைதான்!

"குழந்தை பிறக்காமலிருப்பதற்காக 'லூப்' அணிந்து கொண்டும், பாட்னாவில் உள்ள இரண்டு பெண்களுக்குக் குழந்தைகள் பிறந்துள்ளன. இவற்றின் பெற்றோர்கள் இந்தக் குழந்தைகளுக்கு 'லூபிகா' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்த 'லூபிகா'க்களில் ஒன்றின் தந்தை டாக்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

—'டெக்கான் ஹெரால்டு'

நெய்வேலியில் புதிய கனிவளம்!

அணுசக்தி மூலப் பொருள் கிடைக்கிறது!

சென்னை, ஆக. 25—

நெய்வேலியில் கிடைக்கும் களி மண்ணில் அணுசக்தி வளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 'கழிவு' என்று கருதப்பட்டுச் சுரங்கப் பகுதியில் குவிக்கப்பட்ட களி மண்ணில், அரிய கனிப் பொருள்களான யுரேனியமும், செலினியமும் இருப்பது கண்டறியப்பட்டது.

யுரேனியம், அணு விசைத் திட்டங்களுக்கும், செலினியம் மின்னியல் கருவிகளுக்கும் தேவைப்படுகின்றன.

களி மண்ணிலிருந்து மிகவும் குறைந்த செலவில் யுரேனியத்தையும், செலினியத்தையும் எடுக்கலாம்; ஏனெனில், 'நெய்வேலியில் மிக மலிவாக மின்விசை கிடைக்கிறது' என்று மத்திய அரசின் அணுக் கனிகள் பிரிவைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் கூறுகிறார்.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி தோண்டப்படும் சுமார் $5\frac{1}{2}$ சதுர மைல் பரப்பு நெடுகிலும் யுரேனியமுள்ள கரியகக் களிமண் இருக்கிறது. இக்களிமண்ணில் 0.01 சதவிகித யுரேனிய 'ஆக்சைடு' இருந்தது என்றாலும், 200 மெட்ரிக் டன்னிற்கும் அதிகமான யுரேனியத்தைப் பெற முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தென் பகுதி அணுக் கனிகள் பிரிவு மேலும் ஆராயுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பெர்லின், ஆக. 25—

மேற்கு ஜெர்மனியில் பயணிகளைக் கவருவதில் விமானங்கள்—சாலைப் போக்குவரத்து — இரயில் வண்டி ஆகியவற்றின் இடையே கடும் போட்டி நடைபெற்று வருகிறது; எனவே, பயணிகளைத் தங்கள் பக்கம் இழுக்க மேற்கு ஜெர்மன் இரயில்வே த்துறை, மணிக்கு 200 மைல் வேகத்தில் செல்லும்—பாதுகாப்பான — மிக வேக இரயில் எஞ்சின் தயாரிக்க முயன்று வருகிறது.

தீர்மானம் ஏட்டோடு நின்றுவிடும்!

முன்னாள் மன்னர்களுக்குக் காங்கிரசு பணிவு?

"முன்னாள் அரசர்களுக்குத் தரப்பட்டுவரும் மானியத் தொகையை நிறுத்திவிடுவது என்று, தான் செய்த தீர்மானத்திலிருந்து காங்கிரசுத் தலைமை பின்வாங்கிவிடும்போலத் தெரிகிறது!

"மன்னர்களுக்குத் தரப்பட்டுவரும் இந்த மானியத் தொகையை நிறுத்தினால் நாங்கள் கட்சியிலிருந்து விலகிவிடுவோம்' என்று குசராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் காங்கிரசுத் தலைமையை மிரட்டிவருவதாகத் தெரிகிறது!

'மானியத் தொகையை நிறுத்திவிட வேண்டும்' என்று உள்துறை அமைச்சர் சவான் கூறிவருகிற அதே நேரத்தில் 'அதை நிறுத்தக்கூடாது' என்று இன்னும் சில அமைச்சர்கள் எதிர்க்குரல் எழுப்பியுள்ளார்கள்!

இப்படி எதிர்ப்புக் காட்டும் அமைச்சர்கள் பெயர்களோடு இப்பொழுது வெளிநாட்டுறவுக்கான அமைச்சர் சாக்ளாவின் பெயரும் சேர்ந்திருக்கிறது. மத்திய அமைச்சரவையிலுள்ள முன்னாள் காஷ்மீர் மன்னர் கரண் சிங்—இந்தத் தீர்மானம் நிறைவேறினால்— ஆண்டொன்றிற்கு 10 இலட்ச ரூபாய்களை இழக்க வேண்டியிருக்கும்; ஆகவே, அவரும் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறார்!

'மன்னர்களுடன் எந்தவிதமான உறவும் வைத்துக்கொள்ளக் கூடாது' என்று சவான் எவ்வளவுதான் பிடிவாதம் செய்தாலும், கடைசியில் காங்கிரசுத் தலைமை மன்னர்களிடம் பணிந்துவிடும் என்றே தோன்றுகிறது!"

—'டெக்கான் ஹெரால்டு' 23—8—67 இதழில் மேற்கண்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசு ஊழியர்கள் நூல் எழுதலாம்

சிறந்த நூலுக்குப் பரிசும் உண்டு

ஜெயப்பூர், ஆக. 25—

அரசு ஊழியர் தமது துறையுடன் தொடர்பில்லாத பிற விவகாரங்கள் குறித்து ஒரு நூல் அல்லது கட்டுரை எழுதினால் அவர்களுக்கு ரூ. 1.500 வரை பரிசளிப்பது என்று இராஜஸ்தான் அரசு முடிவு செய்திருக்கிறது.

ஆசிரியர்—பேராசிரியர்—மருத்துவர்—பொறியர் — மற்றும் பிற அரசு ஊழியர், தமக்கு விருப்பமான பொருளில் ஆராய்ச்சி செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்களுக்கு ஐந்தாண்டுகள்வரை ரூ 50 முதல் ரூ. 150 வரை மாதந்தோறும் சிறப்பு ஊதியம் தரப்படும்.

இப்பரிசுகளையும், சிறப்பு ஊதியத்தையும் வழங்குவதற்கு சிறப்பு நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆங்கில ஒழிப்பின் சூத்திரதாரி இந்தி வெறியரான ஒரு துணையமைச்சர்!

அவரைக் கண்டு நடுங்குகிறாராம் பெரிய அமைச்சர்!

மொரார்ஜியும் சவானும் அவருக்குப் பக்கத்துணையாம்!

'மித்திரன்' (சென்னை 23-8-67) இதழில், அதன் டில்லி அரசியல் நிருபர் திரு. கி. கஸ்தூரிரங்கன் எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகிறது :—

பார்லிமெண்டின் $4\frac{1}{2}$ மாத பட்ஜெட் கூட்டத் தொடர், ஒரு வழியாக நடந்தேறியது!

இத்தனை நாள் உட்கார்ந்து என்ன சாதித்தது என்று கூட்டிக் கழித்தால், கொஞ்சம் ஏமாற்றமாகவே இருக்கிறது!

இரயில்வே பட்ஜெட்—பொது பட்ஜெட் போன்ற மாமூலான விஷயங்களைத் தவிர நாட்டை எதிர்நோக்கி இருக்கும் பழைய—புதிய பிரச்சினைகளுக்குப் பார்லிமெண்டில் ஒரு தீர்வும் ஏற்படவில்லை!

பிரச்சினைகள் அனைத்தும் மக்களவை—மாநிலங்களவை ஆகிய இரண்டு அவைகளிலும் அடிபட்டது உண்மையே!

பல தனிப்பட்ட நபர்கள், தங்கள் வாக்குச் சாதுரியத்தைக் காண்பிப்பதற்கு அவை நல்ல வாய்ப்பளித்தன!

தென்னக எம். பி.-க்களைப் பொறுத்தவரையில், மக்கள் சபையில், தி. மு. கழக உறுப்பினர்களான இரா. செழியன், வெ. கிருஷ்ணமூர்த்தி. செ. கந்தப்பன் முதலியவர்களும், கம்யூனிஸ்டுத் தலைவர் பி. இராமமூர்த்தியும், மாநிலங்களவையில் காங்கிரசு ஆ. டி. பார்த்தசாரதியும் கவனத்தைக் கவர்ந்தனர்!

கொடிய ஏமாற்றம்!

தமிழ்நாட்டுக்குக் கவலை தரும் பிரச்சினையான ஆட்சிமொழி மசோதா, இந்தத் தொடரிலும் நிறைவேற்றப்படாமல் விடப்பட்டதுதான்!

'இம்மசோதா கட்டாயம் வந்துவிடும்' என்று தென்னக உறுப்பினர்கள் துவக்கத்தில் நம்பியதால், அதுபற்றித் தீவிரமாக முனையவில்லை!

திடீரென, 'மசோதாவுக்கு எதிர்ப்பு' என்று இந்தி மொழி பேசும் உறுப்பினர்கள், பெரிய மனு ஒன்றைத் தயாரித்துத் தலைமையமைச்சருக்கு அனுப்பியதும், பெரிய சிக்கல் விழுந்துவிட்டது!

'மசோதாவை இப்போது கொண்டு வந்தால் தோற்றுவிடுமோ' என்ற அச்சம் தலைமையமைச்சருக்கும், தென்னக உறுப்பினர்களுக்கும், ஏற்படும் வகையில், இந்த இந்தித் தீவிரவாதிகளின் எதிர்ப்பு—பூதக் கண்ணாடி மூலம்—பெரிதாக்கிக் காண்பிக்கப்பட்டது!

அசட்டு யோசனை!

'மசோதாவைக் கட்டாயம் நிறைவேற்றியே தீரவேண்டும்' என்று இராமமூர்த்தி தலைமையில் மாற்று மனு தயாரிக்கப்பட்டபோது, காலம் தாழ்ந்துவிட்டது!

"மசோதாவை இத்தொடரில் அளித்துவிட்டு, அடுத்த தொடரில்—அதாவது, மூன்று மாதங்களுக்குப் பின்—விவாதம் வைத்துக்கொள்ளலாம்" என்று அரசாங்கத் தரப்பில் யோசனை கூறப்பட்டது; 'அதைவிட வேறு வினை வேண்டியதில்லை' என்று தென்னகத்தைச் சேர்ந்த சில மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்; 'மசோதாவைக் கொண்டுவந்து உடனடியாக நிறைவேற்ற வழி பாருங்கள்; இல்லாவிட்டால், அடுத்த தொடரிலேயே வந்துவிட்டுப் போகட்டும்' என்று கூறி, அரசாங்கத்தின் முன் யோசனையற்ற நடவடிக்கையை சமயத்தில் நிறுத்தினர்!

"மசோதா இப்போது தாக்கல் செய்யப்பட்டால், அது, உடனேயே விவாதத்திற்குரிய பிரச்சினையாகி நாடெங்கிலும் கிளர்ச்சிகளும், வாய்ச் சண்டைகளும் ஆரம்பித்துவிடும். மூன்று மாதங்களுக்குப் பிறகு பார்லிமெண்டு கூடும்போது, இந்தி ஆதரவாளர்கள் கை ஓங்கியிருக்கும் வகையில் கட்சி சேர்ந்துவிடும்" என்று தென்னக உறுப்பினர்கள் பயப்பட்டது நியாயமானதே!

தூங்கினவன் கன்று...

அடுத்த தொடரிலாவது, மசோதா ஆரம்பத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனடியாக நிறைவேற்றப்படத் தமிழ்நாட்டு உறுப்பினர்கள் முயற்சி எடுத்துக்கொண்டாக வேண்டும்; இல்லாவிட்டால், 'தூங்கினவன் கன்று கிடாக்கன்று' என்றாகிவிடும்!

ஏற்கனவே, இந்தி அமைச்சர்கள் ஆங்கிலத்தை விரட்டியடிப்பதற்காக முழுமூச்சுடன் முனைந்து வருகிறார்கள்! சமீபத்தில் மத்திய அரசைச் சார்ந்த கல்வி நிறுவனங்களில், 'இந்தியே போதனா மொழியாக இருக்க வேண்டும்' என்று அமைச்சரவை ஒரு முடிவெடுத்தது!

மாநிலங்களில் தாய்மொழி போதனா மொழியாகும்போது, அகில இந்திய கல்வி நிறுவனங்களில் தேசிய மொழியான இந்தியைப் போதனா மொழியாக்குவதுதான் நியாயம் என்ற அடிப்படையில், இந்த முடிவு எடுக்கப்பட்டது!

குழப்பக் குட்டையில் குளிக்கும் அமைச்சர்!

இதிலுள்ள தீமைகளையும், தீவிர விளைவுகளையும் அமைச்சரவை கவனிக்காமல் விட்டது பலருக்கும் ஆச்சரியத்தை அளித்தது!

தீர விசாரிக்கும்போது, இந்தச் சதிகார யோசனையின் சூத்திரதாரி, இந்தி அபிமானம் மிகவும் அதிகமுள்ள கல்வித் துணையமைச்சர் பகவத் ஜா ஆசாத் என்று தெரியவந்தது.

இதற்கு அனுசரித்துப் போனவர்கள் மொரார்ஜியும், சவானும், ராம் சுபாக் சிங்கும், இன்னும் சிலரும்!

அமைச்சரவையில், மொழி விஷயத்தில் இந்தி அல்லாத மாநிலங்களின் கருத்தை வலியுறுத்த யாரும் இல்லாது போனது துரதிருஷ்டமே!

இந்திரா காந்தி ஒருவர்தான், இந்தி அல்லாத மாநிலங்களின் கருத்துக்கு மதிப்புத்தரக்கூடியவர்! அவருடைய சொந்த—தனிப்பட்ட சங்கடங்களினால் பேச வேண்டிய சமயத்தில் பேசாமல் இருந்துவிடுகிறார்!

கல்வி அமைச்சர் திரிகுண சென், கல்வி மொழி விஷயத்தில் ஒரு குழப்பக் குட்டையில் குளித்துக் கொண்டிருக்கிறார்! அவருடைய துணையமைச்சர் பகவத் ஜா ஆசாத்தைக் கண்டாலே அவருக்குச் சிம்மசொப்பனமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது! அப்படிப் பயந்து நடுங்குகிறவரிடமிருந்து இந்தி அல்லாத மாநிலங்கள் என்ன எதிர்பார்க்க முடியும்?

பயங்கரச் சூழ்ச்சி!

மாநிலங்களில் போதனா மொழி தாய்மொழியாகி, அகில இந்திய கல்வி நிறுவனங்களில் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி வந்துவிட்டால், நாளடைவில் அரசாங்கத்தில் ஆங்கிலம் தெரிந்தவர்

(தொடர்ச்சி 1-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தியின் தொடர்ச்சி)

கள் யாரும் இருக்க மாட்டார்கள்! இந்தி அல்லாத மாநிலங்கள் கட்டாயமாக இந்தியை ஏற்க வேண்டிவரும் என்பதுதான் இத்திட்டத்தின் நோக்கம்!

கொள்கையளவில் நியாயமாகத் தோன்றும் இத்திட்டம், நடைமுறையில் இந்திக்காரர்களுக்குச் சலுகை அளிப்பதாகவே இருக்கும்!

இந்தி அல்லாத மாநிலங்கள் தாய்மொழியைக் கல்லூரியில் போதனா மொழியாக ஏற்பதன் மூலம், ஆங்கிலத்தை அகற்றி அதற்குப் பதில் இந்தியை ஏற்க வேண்டிவரும்!

இந்தியை ஆங்கிலத்துக்குப் பதிலாக ஏற்கும்போது, இந்தி மாநிலத்தில் பிறக்கும் குழந்தைகள் நாட்டின் முதல்தரக் குடிமக்களாகவும் மற்ற இடங்களில் பிறப்பவர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகவும் இருக்க வேண்டிவரும்!

இதைக் கருத்தில் கொண்டு, தமிழகம் போன்ற மாநில அரசுகள் கல்லூரி போதனா மொழிபற்றி நிதானித்துச் செயல்படுவதோடு ஆங்கிலத்தை ஒழிக்கும் இந்திக்காரர்களின் சதியில் தம்மையறியாமல் பிணைக்கப்பட இடந்தரக்கூடாது!

இந்த அரசு இருக்கும் வரையில் இந்தியை நுழைக்க இயலாது

தியாக வரலாறு சமைத்தோரே— தமிழ்த்தாயின் அழைப்பு வரும்வரை பொறுத்திருங்கள்

சென்னை, ஆக. 24—

"1965-ம் ஆண்டிலே ஆசிய வரலாற்றில் - ஏன் - அனைத்துலக வரலாற்றிலேயே—தமிழக வரலாற்றில்—அழியாத இடத்தைப் பெற்றிருக்கிறீர்கள்! அந்த வரலாறு வீர வரலாறு! மானத்தைக் காக்க மாநிலம் எடுத்துக்காட்டும் தியாக வரலாறு; ஏற்றமிகு வரலாறு! எழுச்சி தரும் வரலாறு! அந்த வரலாற்றுக்கு ஆபத்து வரும் என்று நீங்கள் கருதுவதற்கு—அதுவும் எங்களைப் போன்றவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் போது நீங்கள் இப்படி நினைப்பதற்கு உண்மையிலேயே வருத்தப்படுகிறேன்.

"எங்களைப் போன்ற அமைச்சர்கள் பிணமாகி வீழ்ந்துவிட்ட பிறகுதான்—எங்கள் பிணத்தின்மீது நடந்துகொண்டுதான் இந்தி திணிக்கப்பட்டாலும் படலாமே தவிர, அது வரையில் எதுவும் நடைபெற்றுவிடாது!

"இந்தியை இணைப்பு மொழியாக யார் கொண்டுவந்தாலும், அதை எதிர்க்கத் தமிழக மண் தயாராக இருக்கிறது! தாய்மொழியைக் காக்கத்தான் தமிழக அரசும் அமைந்திருக்கிறது!

"தமிழ் வாழவேண்டுமானால்—தமிழகம் தலைநிமிர வேண்டுமானால்—தண்டமிழின் பண்டைச் சிறப்பு தழைக்க வேண்டுமானால்—பிற நாடுகளுடன் 14 மொழிகளும் ஆட்சி மொழியாகும்வரை தொடர்பு கொள்ளவேண்டுமானால்—'ஆங்கிலம் நீடிக்க வேண்டும்' என்றுதான் தமிழ்நாட்டின் கடைசித் தமிழன் இருப்பானே தவிர, தமிழைக் காட்டிக் கொடுத்து இந்தி நுழைய ஏமாந்துவிட மாட்டான்!

"தமிழ்நாட்டு மக்கள் தமிழைக் காப்பாற்றுவதற்காகத் துப்பாக்கிக் குண்டுகளை மார்பிலே தாங்கினார்கள்! கபாலம் வெடித்து மூளை சிதறச் சிதற கைத்தடியால் அடிபட்டார்கள்! கட்டிய மனைவிமார்கள் கண்கலங்கி அழ, குண்டடிபட்டு இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்தார்கள்! கொழுந்துவிட்டெரியும் செந்தீப்பிழம்பினில்—எழுந்துவிட்ட தன்மான உணர்ச்சியினால்—வீழ்ந்து உயிர் துறந்து, 'அழிந்துவிட்டுப் போகட்டும் தேகம்; இங்கே இழிந்துபட்ட இந்தி வரக்கூடாது' என்று தமிழுக்கு மூச்சுத் தந்தார்கள்—சாகாத புகழ்கொண்ட தன்மானத் தமிழ் மறவர்!

"அப்படிப்பட்ட வீரபரம்பரை இன்னும் முடிவடையவில்லை! இந்தி இங்கே நுழைய முடியாது என்று வடக்கே இருக்கின்ற டில்லிப் பேரரசுக்கு இந்த நேரத்தில் இதை எச்சரிக்கையாக விடுக்கிறேன்.

"தமிழ் நாடு புறக்கணிக்கப்படுமானால்—தமிழ்நாட்டின் எண்ணங்கள் குப்பைக் கூடையிலே தள்ளப்படுமானால்—சிறை செல்லத் தயாராயிருக்கிறோம்' என்று, திருநெல்வேலிச் சீமையிலே அண்ணா கூறியதை நீங்கள் மறந்துவிட முடியாது!

"இதை நான் சொல்லக் காரணம், 'நாங்களே மொழிப் பிரச்சினையைத் தீர்த்துவிடுவோம்; நீங்கள் அமைதியாக இருங்கள்' என்பதற்குத்தான்!

"எங்களால் முடியாவிட்டால்—நாங்கள் நிராயுதபாணிகளாக ஆக்கப்பட்டால்—கோழையாகி விட்டோமானால்—எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை என்று ஒப்புக்கொள்ளும்வரையில்—நீங்கள் எந்தவிதமான செயலிலும் இறங்கிவிடக் கூடாது!

"புறநானூற்றிலே நீங்கள் படித்திருப்பீர்கள்—தந்தை களம் பட்ட பிறகு—தமையன் களம்பட்ட பிறகு—கணவன் களம் பட்ட பிறகு—வீதியிலே விளையாடிய ஏழு வயதுச் சிறுவனைத் தூக்கிக்கொண்டு வந்து சீவி முடித்து, 'சென்று வா செருமுனை நோக்கி; வென்று வா மகனே' என்ற வீரத் தாய்க் கதையை அறிந்திருப்பீர்கள்!

"அதுபோல் நாங்களெல்லாம் களம்பட்ட பிறகு—சிறைச்சாலைக்குள்ளே சித்திரவதை செய்யப்பட்டுச் செத்த பிறகு—எதிரிகளால் ஈட்டிக்கும் வாளுக்கும் இரையான பிறகு—தமிழ்த்தாய் உங்களையெல்லாம் அழைப்பாள்! அதுவரை பொறுத்திருங்கள்!"

—அமைச்சர் மு. கருணாநிதி

(பச்சையப்பன் கல்லூரிப் பேரவைத் துவக்க விழாவில்)

கிழக்கு வானில் நட்சத்திரம் எழுந்தது--ஆனால் நம்பிக்கை மறைந்தது!

திட்டங்கள் முழுப் பலன் அளிக்கவில்லை --முன்னேற்றம் போதுமானதாக இல்லை!

நலிந்த நிலையில் நாடு--மனம் குலைந்த போக்கில் மக்கள்-- 'இருபதாண்டு இந்தியா' பற்றி அமெரிக்க இதழ் 'டைம்'

★

" இந்தியாவின் முதல் சுதந்தர தினத்தன்று நேரு சொல்லியது நினைவுக்கு வருகிறது—

'ஒரு புதிய நட்சத்திரம் -- சுதந்தர நட்சத்திரம் கிழக்கே உதிக்கிறது! புதிய நம்பிக்கை கிடைக்க இருக்கிறது!'

" அவர் இதைச் சொல்லி இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன ; ஆனால் இந்தியர்கள் இன்னும் அந்த நம்பிக்கையைப் பெறவில்லை! நட்சத்திரம் தான் உதித்தது ; ஆனால், நம்பிக்கை ஒளி மறைந்துகொண்டே செல்கிறது!"

என்று பிரபல அமெரிக்க வார இதழான 'டைம்' இந்தக் கிழமை எழுதியிருக்கிறது. அதில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

இருபதாண்டுகளுக்கு முன்னர் தனது தந்தை நின்ற அதே இடத்தில்—தளர்ச்சியும் சோகமும் கப்பிய இந்திரா—இந்தியாவின் இந்த ஆண்டு சுதந்தரத் தினச் செய்தியை முழங்கியிருக்கிறார்! அவரது உரையில் புதிய நம்பிக்கையோ மனதுக்கு மகிழ்வோ ஏதும் இல்லை! அதற்கு மாறாக, 'நாம் சோதனைக் கட்டத்தில் இருக்கிறோம்' என்ற எச்சரிக்கையைத் தான் நேருவின் மகள் நாட்டுக்கு வழங்கினார்!

உணவுத் துறையில் நாடு பற்றுக்குறை நிலையில் இருப்பதை ஒத்துக்கொண்ட இந்திரா, அதே சமயம், 'நாடு, மற்ற துறைகளில் பெற்றிருக்கும் முன்னேற்றங்களை இளைஞர் சமுதாயம் உணரவில்லை' என்று குற்றஞ்சாட்டினார்!

உலகின் 13-வது இரும்பு உற்பத்தி செய்யும் நாடு—சுதந்தரத்துக்குப் பின் மின்சார உற்பத்தி ஐந்து மடங்காகியிருக்கிறது. உற்பத்தி பொருள்கள் 150 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது—எல்லாவற்றுக்கும் மேலாக, சனநாயக அமைப்பினைக் கொண்டிருக்கிறது—

இருந்தாலும், முப்பது வயதுக்குக் கீழ்உள்ள இந்தியாவின் பாதிப்பகுதி மக்களுக்கு, இந்த முன்னேற்றங்களேல்லாம் திருப்தியளிப்பதாக இல்லை! இந்த முன்னேற்றங்களேல்லாம் போதுமானவை என்று அவர்கள் நம்பத் தயாராயில்லை.

தவறான திட்டங்கள்—கடுமையான நீர்த்தட்டுப்பாடு ஆகியவைகளினால் விளைந்த கடும் பஞ்சத்துக்கு அமெரிக்க உணவு உதவிதான் கைகொடுத்து நிறுத்தியது! என்னதான் இயற்கை இனி ஒத்துழைத்தாலும், அநேக ஆண்டுகளுக்கு இந்தியா தனது உணவுத் தேவையில், பத்தில் ஒரு பகுதியை வெளிநாடுகளிலிருந்துதான் பெறவேண்டியிருக்கும்!

உள்நாட்டில் வாங்கும் சக்தி குறைவு—வெளிநாட்டு வாணிபத்தில் போட்டியிடும் திறமையின்மை ஆகிய இரண்டும், இந்தியாவின் தொழில் உற்பத்தியைத் தேக்க நிலையில் ஆழ்த்தியிருக்கின்றன!

வட்டார மொழி விரோதங்கள்—ஒவ்வொரு நிமிடமும்—இந்தியாவின் ஒற்றுமையைக் குலைத்துக்கொண்டிருக்கின்றன!

உணவு பற்றியோ, மொழி பற்றியோ அல்லது அரசியல் குறித்தோ இந்தியாவில் நாள்தோறும் எங்காவது ஒரு மூலையில் கலவரங்கள் நடந்தபடி இருக்கின்றன!

நாட்டின் பிரச்சினைகளைத் தன்னால் சமாளிக்க முடியும்—என்று சாஸ்திரியைப் பின்பற்றி—20 மாதங்களுக்கு முன் பதவிக்கு வந்த இந்திராவால் உறுதி தெரிவிக்க முடியவில்லை!

அவருடைய நலிந்த ஆட்சியும் சேர்ந்துதான் காங்கிரசுக் கடந்த தேர்தலில் பெரும் தோல்வியைக் கொடுத்தது!

சர்வ வல்லமை படைத்த கட்சியாக இருந்த காங்கிரசு, இன்று புதுடில்லியில் 48 பேர் பெரும்பான்மையில் உயிர் பிழைத்துக் கொண்டிருக்கிறது!

இந்தியாவின் 17 மாநிலங்களில் ஒன்பது இடங்களில் எதிர்க் கட்சிகளின் ஆட்சி நடைபெறுகிறது!

காங்கிரசுக் கட்சியின் சரிவை, இந்தியாவுக்குப் பல கட்சி அரசியல் அமைப்பு முறை வருவதன் அறிகுறியாகச் சிலர் கருதுகிறார்கள்!

நிதி ஒதுக்கீட்டிலும், உணவுப் பங்கீட்டிலும் எதிர்க் கட்சி மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் இப்போதே கசப்பு உணர்வுகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன!

கோவை வேலைநிறுத்தம் நின்றது---

முதலமைச்சர் முயற்சி வென்றது!

செப். 15-க்குள் எல்லா ஆலையும் திறக்கப்படும்

அதன் பின்னும் திறக்காத ஆலைகளை தமிழக அரசே ஏற்கும்

பாதிக்கப்பட்ட தொழிலாளருக்கு நிவாரணம் அளிக்கவும் உறுதிமொழி --- அண்ணா அறிக்கை

திருச்சி, ஆக. 26—

கோவை ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் முதலமைச்சர் அண்ணா அவர்களின் தலையீட்டால் இன்று திரும்பப் பெறப்பட்டது.

நேற்று திருச்சியில் முதலமைச்சர் கூட்டிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மாநாட்டில் ஏற்பட்ட உடன்பாட்டையடுத்து இந்த முடிவு செய்யப்பட்டது. இந்த உடன்பாட்டில் முதலமைச்சர் அண்ணா அவர்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கையொப்பமிட்டனர்.

அறிஞர் அண்ணா அறிக்கை

"கோவை ஆலைத் தொழிலாளர் சங்கங்களின் தலைவர்கள் பூபதி, ஏ. சுப்பிரமணியம், ஆறுமுகம், கண்ணுகுட்டி, சுப்பையா ஆகியோருடன், இன்று ஏற்பட்டிருக்கும் வேலை நிறுத்தம் பற்றிப் பேசினேன்.

"பல மாதங்களாக மூடப்பட்டுள்ள ஆலைகளை விரைவில் திறந்தால் தவிர தொழிலாளர்களின் துயரம் தாங்க முடியாதது ஆகிவிடும் என்பதால், டாக்டர் லோகநாதன் கமிட்டி கூறிய திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தத் தமிழக அரசு, மூடப்பட்ட ஆலைகளை செப்டம்பர் 15-ந் தேதிக்குள் திறப்பது என்ற உறுதியை அளித்திட்டேன்.

"செப்டம்பர் 15-ந் தேதிக்குப் பிறகும் ஏதாவது ஆலை திறக்கப்பட இயலாத நிலை ஏற்பட்டுவிடுமானால், மத்திய அரசின் அனுமதி பெற்றுத் தமிழக அரசு அந்த ஆலையை ஏற்று நடத்துவது என்றும், அதற்கிடையில், அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிப்பது பற்றித் தமிழக அரசு பொறுப்பேற்றுக்கொள்வது என்றும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி செயல்படுவது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

" இந்த இரண்டு வாக்குறுதிகளும் ஆலைத் தொழிலாளர்களின் இன்றையப் பிரச்சினைக்குப் பரிகாரம் காண்பதில் தமிழக அரசு கொண்டுள்ள அக்கறையைக் காட்டுவதனை உணர்ந்து, தொழிற்சங்கத் தலைவர்கள் பொது வேலை நிறுத்தத்தினை விட்டுவிடத் தீர்மானித்தனர்."

அண்ணாவுக்குப் பாராட்டு--நன்றி

கோவை ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பணிக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்து இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரசுத் தலைவர் ஜி. இராமானுஜம் அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார்.

நடக்க இருப்பவை

27--8--67

திண்டிவனம்

முஸ்லிம் லீக் சார்பில், சட்டமன்ற உறுப்பினர்கள் எம். எம். பீர்முகமது, வி. முனுசாமி பி.காம்., பி,எல்., ஆகியோருக்குப் பாராட்டு, மாலை 6-மணிக்கு, காந்தியார் திடலில் ; தலைவர் : எம். இனயதுல்லா ; பாராட்டுவோர்: எம். எம். அப்துல்வகாப், ஆ. தங்கவேலு, எஸ். பக்கிரி, வி. கமலக்கண்ணன், அப்துல் வகாப். இசை : எம்.எம்.யூசுப்.

மாறுமதுரை

தி.மு.க. சார்பில் மாலை 6-30 மணிக்கு வைகையில் ; தலைவர் ; பொ. குமரன் ; பேசுவோர் : வெ. கண்ணன், தா. கிருட்டிணன் எம்.ஏ., எம்.பி., மு. க. எழில்மன்னன், எம்.ஆர். சுப்பிரமணியம்.

28--8--67

சென்னை 92-வது வட்டம்

கருணாநிதி மன்றச் சார்பில் ஏ. எஸ். இராமன் எம்,சி., சா. கணேசன் எம்.சி. ஆகியோருக்குப் பாராட்டு ; மாலை 6-மணிக்கு 'பேசும் படம்' எதிரிலுள்ள திடலில் ; தலைவர் : எம். இராசு ; பேசுவோர் : க. அன்பழகன் எம்.ஏ., எம்.பி., பி. சிவசங்கரன் எம்.பி., எம். கோபால் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

பெ. சீனிவாசன் மீதான வழக்கு

திரும்பப் பெறப்பட்டது

மதுரை, ஆக. 25—

துலுக்கப்பட்டி சிமெண்டுத் தொழிற்சாலைத் தொழிலாளர் போராட்டத் தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் பெ. சீனிவாசன் மீதும், மற்றும் அவருடன் கைது செய்யப்பட்டவர்கள் மீதும் தொடரப்பட்ட வழக்கை அரசு திரும்பப் பெற ஆணை பிறப்பித்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பாலர் அரங்கம்

ஆகஸ்டு 27-ந் தேதி மாலை 4-மணிக்கு சிந்தாதிரிப்பேட்டை கல்யாணம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவிகளால்

'சிறுவர் கலை நிகழ்ச்சி'

கட்டணம் வழக்கம்போல்

NOTIFICATION

Supply of tractors to ryots under Hire Purchase Scheme during 1967—68

APPLICATIONS INVITED

It is proposed to distribute tractors to the Farmers in Madras State under hire purchase scheme. The object of the scheme is to provide tractors to agriculturists who can profitably use tractors for Farm mechanisation, but who are not in a position to buy a tractor from their own resources.

2. Applications in the prescribed form are therefore invited from the ryots of Madras State for supply of wheel type Tractors with matched implements at a cost not exceeding Rs 25,000/- in each case for agricultural purposes against the security of landed property and other immovable property worth not less than Rs. 37,500/- free of incumbrances. The landed property to be secured to Government should be minimum 5 acres wet or 10 acres dry lands. (Alternatively loans upto Rs. 20,000/- will be issued in cases where the solvency is not less than Rs 30,0[illegible]/- (minimum) The cost of machinery is recoverable in ten equal annual instalments with centage and interest at the rates approved by the Government. Prescribed Application forms, Rules and other datailed particulars can be had from the Offices of the District Agricultural Officers concerned or Assistant Agricultural Engineers concerned (or Agricultural Engineer, Agricultural Implements workshop, Tiruvarur in the case of Thanjavur District) Application form with the required documents should be sent only to the DISTRICT AGRICULTURAL OFFICER concerned. The last date for receipt of applications in the Office of the District Agricultural Officer concerned is 30th September 1967. Applications received after that date and defective applications will be rejected.

3. The ryots who have already applied in the prescribed form along with all documents to the department need not apply again. Their applications along with the others who apply to response to this notification will be considered on their merits.

DIRECTOR OF AGRICULTURE
Madras

மற்றோர் புதிய பேருந்து

சென்னை -- மதுராந்தகம் இடையே அரசு விடுகிறது

சென்னை, ஆக. 26—

இன்று முதல் சென்னை – பிராட்வேயிலிருந்து மதுராந்தகத்துக்கு அரசுப் பேருந்து விடப்படும்.

96-ம் எண்ணுள்ள இப்பேருந்து பிராட்வேயிலிருந்து புறப்பட்டு, சென்ட்ரல், ஆயிரம்விளக்கு, சைதாப்பேட்டை, பல்லாவரம், தாம்பரம், வண்டலூர், புதுப்பாக்கம், பகளம்பாக்கம், திருப்போரூர், மாறும்பதி, திருக்கழுக்குன்றம், பாண்டூர் வழியாகச் செல்லும். பயண நேரம் 3 மணி 45 நிமிடம்; கட்டணம் ரூ. 2.22.